குருணாகல் பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருணாகல் பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதியறிக்கை முன்னைய வருடத்துடன் ஓப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதி அறிக்கைகளில் உற்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய பொது நிர்வாகத்தற்குறிய ஏனைய வருமானங்கள் ரூபா 216,056,698 தொகை நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | இருமுறை கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய ஓய்வூதிய உதவு தொகை ரூபா 1,230,470 மேலதிகமாகவும் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 36,594 குறைவாகவும் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன. | ஓய்வூதிய கொடுப்பனவு உதவு தொகை கணக்கை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் கட்டிட அபிவிருத்திக்காக செலவீடு செய்த ரூபா 6,051,334 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கட்டிட அபிவிருத்திக்காக செலவீடு செய்த தொகை மூலதனமாக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 06 வகையான கணக்கு விடயங்கள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி மற்றும் அன்மித்த அறிக்கைகளுக்கமைய பெறுமதிகளுக்கிடையில் ரூபா 257,322,045 ஆன தொகை வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், மீதிகளின் வேறுபாடு தொடர்பில் கணக்குகளை சீராக்கம் செய்ய நடவடிக்கை மற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இவ்வேறுபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறித்த மீதிகளின் வித்தியாசத்தினை இணக்கம் செய்து கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132 ஈ.ஏ.ஒ,க பிரிவு பிரகாரம் சபை நிதியத்தினால் செலவிடும் போது 2015 நொவெம்பர் 02 ஆந் திகதிய 2015/01 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 03 பிரிவின் பிரகாரம் தனிப்பட்ட வேண்டுகோளின்படி வழங்கக்கூடிய ஆகக்கூடுதலான உதவு தொகை ரூபா 25,000 ஆன போதும் அதற்கு முரணாக ரூபா 500,000 உதவு தொகையொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்உதவு தொகையை வழங்கும் போது குறைந்த வருமானம் பெறுவது உறுதிப் படுத்தப்படாதிருந்ததுடன், அவசர இடர் என்பன உறுதிப்படுத்தப் படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பாராளுமன்ற உருப்பினரின் வீடு முற்றாக சேதமடைந்ததாகவும் மகா சபையின் விஷேட அனுமதியாக ரூபா 1,000,000 தொகை அனுமதிக்கப்பட்டிருந்த போதும் உள்ளூராட்சி ஆணையாலரினால் ரூபா 500,000 ஆக குறைத்து ஆளுனருக்கு முன்வைக்கப்பட்டதன் பின் பிரதான அமைச்சின் செயலாளரினால் ரூபா 500,000 தொகை கொடுப்பனவுக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுருத்தல் களுக்கமைய உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தெகை ரூபா 23,642,232 ஆன 03 வகை கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அட்டவணைகள் சமர்ப்பிப்பதாகவும், சில மீதிகளுக்கான அட்டவணைகள் இல்லையென்பதாக அறியத்தருகிறேன் | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,319,946 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 172,537,833 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் ஈட்டலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,735,198 வீதவரி மற்றும் வரி நிலுவை தொகையில் ரூபா 5,426,304 ஆன தொகையும், வருடத்தில் பட்டியல் தொகை ரூபா 12,642,457 தொகையில் ரூபா 3,997,415 ஆன தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் நிலுவை வருமான தொகைகளை அறவிடுவது தொடர்பில் மேலும் செயற்படுவதாக கணக்காய்விற்கு அறியத்தருகிறேன். | நிலுவை தொகைகளை அறவிடுவதற்கு செயல்முறைகளை பயன்படுத்தி நிலுவை வருமானங்களை அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய கைத்தொழில் கடன்பட்டோர் மீதி மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் மொத்த கூட்டுத் தொகை பெறுமதி ரூபா 281,638,841 ஆகும். இது தொடர்பான காலப பகுப்பாய்வின் படி 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 26,541,753 ஆகவும், 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,148,299 ஆகவும் காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்ய உரிய நடவடிக்கை செய்து கொண்டிருப்பதாக. | பெறவேண்டிய நிலுவைகளை விரைவாக அறவீடு செய்ய பொருத்தமான நிர்வாக முறைமையொன்றினை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய நானாவித வைப்புக்கள் மற்றும் கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 392,736,248 ஆகும். இது தொடர்பான கால ஆய்வின்படி 01 முதல் 05 வருடங்களுக்கு உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 183,450,387 ஆகவும், 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 784,627 ஆகவும் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |